சட்டக் கல்வி இயக்குநரின் செயல்முறை ஆணை, சென்னை–10.
பிறப்பிப்பவர் : பேரா (முனைவர் ) நா.சு. சந்தோஷ்குமார்

அரசு சட்டக்கல்லூரி
370
21 SEP 2020
வேலூர் - 06

செ.மு.ஆணை எண். 503/ அ2 / 2019 நாள் : 11–9–2020.

பொருள் : பணியாளர் தொகுதி – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்டு, சட்டக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்காலிக நியமனம் வழங்கப்பட்ட இளநிலை உதவியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்தி ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை :
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் கடித எண்.1345/PSD – G1/2019, நாள் 13–02–2019.
2. இவ்வலுவலக செயல் முறை ஆணை எண். 503/அ2/2019, நாள் 08–03–2019.
3. இவ்வலுவலக கடித ந.க.எண்.503/அ2/2019, நாள் 16–7–2019.
4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் கடித எண். 1345/PSD-G1/2019, நாள் 26–07–2019.

----

பார்வை ஒன்றிற் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் கடிதத்தின் வாயிலாக, சட்டக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, சட்டக் கல்வி இயக்குநரின் செயல்முறை ஆணை மூலம் தற்காலிகப் பணி நியமனம் வழங்கப்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள இளநிலை உதவியாளர்களின் விண்ணப்பம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக பார்வை ஒன்று மற்றும் நான்கிற் காணும் கடிதங்களில் தெரிவித்துள்ளதால், அவர்களின் தற்காலிக பணி நியமனம், அவர்கள் இத்துறையில் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

13.5
21/09/2020

| வ.எண் | பெயர் | பணிபுரியும் அலுவலகம் | பணி வரன்முறைப் படுத்தப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.ஏ.யுவராஜ், | அரசு சட்டக கல்லூரி, வேலூர். | 13–3–2019 மு.ப. |
| 2 | திருமதி.ஜி.சண்முக மீனாட்சி | அரசு சட்டக் கல்லூரி, மதுரை. | 15–3–2019 மு.ப. |

மேற்குறிப்பிட்ட இளநிலை உதவியாளர்களின் பணிவரன்முறை, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் இப்பணி நியமனம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள நீதிப்பேராணைகளில் பிறப்பிக்கப்படும் இறுதி ஆணைக்குட்பட்டதாகும்.

இதற்கான பதிவுகள் மேற்குறிப்பிட்ட பணியாளர்களின் பணிப்பதிவேடுகளில் பதிவு செய்யப்பட வேண்டும்.

...2

மேலும், இவ்வாணை கிடைக்கப்பெற்றதற்கான ஏற்பளிப்பினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பி வைக்குமாறு தொடர்புடைய அரசு சட்டக் கல்லூரி முதல்வர்கள் கோரப்படுகிறார்கள்.

சட்டக் கல்வி இயக்குநர்.

பெறுநர்

சம்பந்தப்பட்ட பணியாளர்கள் (முதல்வர் மூலம்)

நகல் :

1. முதல்வர், அரசு சட்டக் கல்லூரி, மதுரை.
2. முதல்வர், அரசு சட்டக் கல்லூரி, வேலூர்.
3. இருப்பு கோப்பு.

முதல்வர் அலுவலகம்,
அரசு சட்டக் கல்லூரி,
வேலூர்-9.

மே.இ.ந.க.எண் 370/அ1/2020

நாள் - 21-09-2020

நகல் அனுப்பப்படுகிறது

முதல்வர்
அரசு சட்டக் கல்லூரி
வேலூர் – 6

21/09/2020

பெறுநர்:
திரு. ஏ. யுவராஜ்,
இளநிலை உதவியாளர்,
அரசு சட்டக் கல்லூரி,
வேலூர்- 06.